**மொரட்டுவை பல்கலைக்கழக தொழிநுட்ப நிறுவகம் - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மொரட்டுவை பல்கலைக்கழக தொழிநுட்ப நிறுவனத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 18 ஆம் பிரிவின் பிரகாரம் விதிக்கப்பட்டுள்ள 2000 இன் 03 ஆம் இலக்க மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப நிறுவன சாசனத்தின் 20 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகள் மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, நிறுவனத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி

இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிறுவனம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகாரசபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிறுவனத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,
- நிறுவனத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- நிறுவனத்தின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- நிறுவனத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

| உரிய நியமத்துடனான இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் பெறப்பட்ட ரூபா 5,298,000 ஆன மூலதன மானியங்கள் தொடர்பாக, இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 11 இன் படி நிதிக்கூற்றுக்களின் இனங்காணல் மற்றும் அளவீடுகள் மேற்கொள்ளப்படவில்லை. | நிறுவனத்தால் பெறப்பட்ட மூலதன மானியங்கள் அங்கீகரிக்கப்பட்டு, அவை பெறப்பட்ட அதே நேரத்தில் வரவு செலவுத் திட்ட ஒதுக்கீட்டில் காட்டப்பட்டுள்ள மூலதன பெறுவனவுக் கணக்குகளில் தனித்தனியாகக் கணக்கு வைக்கப்படும். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் பிரகாரம் செயற்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | மீளாய்வாண்டின் போது ரூபா 5,346,000 கிரயமான கணினி இயந்திரங்கள் சுவீகரிக்கப்பட்டிருந்த போதிலும், வழங்குநருக்கு ஆண்டினுள் செலுத்தப்பட்டிருந்த ரூபா 4,276,800 மாத்திரம் கணக்கு வைக்கப்பட்டிருந்த காரணத்தால் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் மற்றும் கடன் கொடுத்தோர் ரூபா 1,069,200 இனால் குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | கொள்வனவு செய்யப்பட்ட கணினிகள் தொடர்பில் அதன் பெறுமதிகளை சரியாக கணக்கு வைப்பதற்கு குறித்து வைத்துக்கொள்ளப்பட்டது. | உரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன், நிதிக்கூற்றுக்களை சரியாக தயாரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டினுள் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக செலுத்தப்பட்டிருந்த ரூபா 1,013,731 தொகை செயற்பாட்டு செலவினமாக கருதி இலாபத்திற்கு எதிராக பதிவழிக்கப்பட்டிருந்த காரணத்தால் ஆண்டிற்கான பற்றாக்குறை மற்றும் ஆதனங்கள், பொறிகள் மற்றும் | தாங்களால் சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 1,013,731.00 பெறுமதிக்குரிய கொள்வனவுகளில் சில உருப்படிகள் மாத்திரம் மூலதன உருப்படிகளாக உள்ளமை அவதானிக்கப்பட்டதுடன், அந்த பெறுமதி ரூபா 262,020.00 ஆகும். எஞ்சியவை மீண்டெழும் | தேவையான திருத்தங்களைச் செய்து, செயற்பாட்டுச் செலவுகள் மற்றும் மூலதனச் செலவுகளைத் துல்லியமாகக் கண்டறிந்து கணக்கு வைப்பதற்கான |

| | | | |
|---|---|---|---|
| | உபகரணங்களின் கிரயம் அதற்கு சமனான அளவினால் முறையே அதிகரித்தும் குறைத்தும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்றது. | செலவினங்களுக்கு உரியவை ஆகும். இதற்கமைய உரிய சீராக்கங்களை மேற்கொள்ள குறித்து வைத்துக்கொள்ளப்பட்டது. | ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். |
| (இ) | 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் மீள்மதிப்பிடப்பட்ட சொத்துகளுக்குரிய ரூபா 5,069,933 தொகையான பெறுமானத்தேய்வு, பெறுமானத்தேய்வு கணக்கிற்கு வரவு வைப்பதற்கு பதிலாக மீள்மதிப்பீட்டு ஒதுக்கக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்த காரணத்தால் மீள்மதிப்பீட்டு ஒதுக்கக் கணக்கு மற்றும் பொது ஒதுக்கீட்டு கணக்கு அதற்கு சமனான அளவினால் முறையே அதிகரித்தும் குறைத்தும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்றது. | 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில், மீள்மதிப்பிடப்பட்ட சொத்துக்களின் தேய்வினை துல்லியமாகக் கணக்கிட பதிவுகள் வைக்கப்பட்டன. | தேவையான திருத்தங்கள் செய்து, நிதிநிலை அறிக்கைகளை சரியாக தயாரிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டுக்கான பணிக்கொடை ஒதுக்கம் ரூபா 7,678,951 ஆன் தொகை நிதியல்லாத செயற்பாடுகளின் கீழ் ஆண்டிற்கான பற்றாக்குறைக்கு சீராக்கப்பட்டு, மீளாய்வாண்டில் காசாக செலுத்தப்பட்ட பணிக்கொடை ரூபா 2,083,888 தொகை முதலீட்டு நடவடிக்கைகளின் கீழ் காசு வெளிப்பாய்ச்சலாக காண்பித்து காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், அதற்கு பதிலாக மீளாய்வாண்டினுள் பணிக்கொடை ஒதுக்கக் கணக்கில் ஏற்பட்டிருந்த வேறுபாடு ரூபா 3,177,113 தொகை நிதியல்லாத செயற்பாடுகளின் கீழ் ஆண்டின் பற்றாக்குறைக்கு சீராக்கப்பட்டு காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டிருந்தது. | காசுப்பாய்ச்சல் கூற்று தொடர்பில் தாங்களால் சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் ஆராய்ந்து திருத்துவதற்கு குறித்து வைத்துக்கொள்ளப்பட்டது. | காசுப்பாய்ச்சல் கூற்றினை சரியாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |
| (உ) | மீளாய்வாண்டில் மட்டுப்படுத்தப்பட்ட நிதியக் (Restricted Fund) கணக்கிற்கு காசு பெறுவனவு மற்றும் காசு | காசுப்பாய்ச்சல் கூற்று தொடர்பில் தாங்களால் சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் | தேவையான திருத்தங்கள் செய்யப்பட வேண்டும். |

| | |
|---|---|
| செலுத்தல் முறையே நிதி நடவடிக்கைகள் மற்றும் முதலீட்டு நடவடிக்கைகளில் கீழ் காண்பிக்கப்பட்டு காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், அதற்கு பதிலாக மீளாவாண்டில் அந்த கணக்கில் ஏற்பட்டிருந்த வேறுபாடு ரூபா 8,319,954 தொகை நிதி நடவடிக்கைகளின் கீழ் காண்பிக்கப்பட்டு காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டிருந்தது. | ஆராய்ந்து திருத்துவதற்கு குறித்து வைத்துக்கொள்ளப்பட்டது. |

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 செலுத்த வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஒரு வருடத்திற்கு மேற்பட்ட ரூபா 8,839,815 கூட்டுத்தொகையான கடன் கொடுத்தோர் மீதிகளை தீர்ப்பனவு செய்ய 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கடன் கொடுத்தோர் மீதிகளை தீர்ப்பனவு செய்ய போதிய அளவிலான நிதியேற்பாடு கிடைக்காமை, நிறுவனத்திற்கு சொந்தமாக ஏனைய ஈட்டப்பட்ட வருமானங்கள் இல்லாதிருந்தமை போன்றன காரணங்களாக குறிப்பிடலாம். | கடன் கொடுத்தோர் மீதிகளை தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 45(1)(2)(xv) ஆம் பிரிவு | 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நிறுவனத்தின் ஏனைய 12 நிதியங்களில் காணப்பட்ட ரூபா 42,781,072 கூட்டுத்தொகையான பணத்தை முதலீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில் லை. | 2017 ஆம் ஆண்டு முதல் இன்றுவரை மீணடெழும் செலவினங்களுக்கு போதுமான நிதி இல்லாத காரணத்தால் நிறுவனத்திற்குக் கிடைக்கும் மற்ற அனைத்து நிதிகளும் பயன்படுத்த நேர்ந்திருந்தது.<br><br>நீங்கள் சுட்டிக்காட்டிய ரூபா 42,781,072.00 | பல்கலைக்கழகச் சட்டத்தின்படி செயற்பட வேண்டும். |

அந்தந்த நிதியக் கணக்குகளில் மீதிகளாக காட்டப்பட்டாலும், அது உண்மையில் கணக்குகளில் இல்லாததால் பணத்தை முதலீடு செய்ய முடியவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 24,900,166 பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 1,564,284 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 23,335,882 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு ஆளணி வேதனங்கள் செலவினம்ரூபா 34,373,048 இனால் அதிகரித்தமை பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக ரூபா 1,221,100 கிரயமான நிறப்பூச்சு மற்றும் கிரவுட் உள்ளடங்கலாக மருத்து நிலையத்திற்கு சொந்தமாக காணப்பட்ட ரூபா 35,564 கிரயமான மருந்துப் பொருட்கள் இருப்பு காலாவதியாகியிருந்தது. | மருந்துகள் பயன்படுத்தப்படாமைக்கு காரணமாக அமைந்திருந்தது 2020/2021 ஆம் ஆண்டுகளில் நிலவிய கொரோனா தொற்றுநோய் காரணமாக நிறுவனத்திற்கு மாணவர்கள் வரவழைக்கப்படாமை மற்றும் அவ்வப்போது பதவியணியினருக்கும் நிறுவனங்கள் மூடப்பட்டிருந்தமை ஆகும்.<br><br>ICC நிறுவனத்தினால் கையளிக்கப்பட்ட இந்த இருப்புகள் தொடர்பிலும் குழுவின் பரிந்துரைக்கமைய நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. | தேவைப்பாட்டின் பிரகாரம் இருப்பு கொள்வனவு இடம்பெற வேண்டும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கைகள் மற்றும் பிணைமுறிகளை மீறிய கல்விசார் பதவியணியின் மூன்று உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 10,557,026 கூட்டுத்தொகையை அறவிட முடியாதிருந்தது. | கல்விசார் பதவியணியால் மீறப்பட்ட ஒப்பந்தங்கள் மற்றும் பத்திரங்களுக்காக நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய பணத்தை வசூலிப்பது தொடர்பான நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன. | உரிய பணத்தை அறவிடுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | ரூபா 175,376,800 மதிப்பீட்டு பெறுமதியுடைய தொழில்நுட்ப நிறுவனம் அமைந்துள்ள காணியை நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு சுவீகரிப்பதற்கு 2009 நவம்பர் 29 ஆந் திகதி ரூபா 25,000,000 தொகை நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு செலுத்தப்பட்ட திகதி முதல் அறிக்கையின் திகதி வரையிலும் 12 வருட காலமாக காணியின் உரித்தினை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காணி உரிமை தொடர்பான விடயங்களைத் தீர்ப்பதற்காக 2021 மே 06 ஆம் திகதி ஹோமாகம பிரதேச செயலாளரிடம் விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளதுடன், காணியின் உரிமையை கையகப்படுத்துவது தொடர்பாக 2021 ஆகஸ்ட் 17 ஆம் திகதி காணி ஆணையாளர் நாயகத்திடம் விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளது. அந்தக் கோரிக்கைகளுக்கு உரிய பதிலாக 2022 மார்ச் 03 ஆம் திகதி ஹோமாகம பிரதேச செயலகத்தினால் கூட்டமொன்றுக்கு அழைப்பு விடுக்கப்பட்டதுடன், அந்தப் பணிகளை முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக பிராந்திய செயலாளர் தெரிவித்துள்ளார். | சட்டப்படியான உரிமையை விரைவில் பெற நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2016 மார்ச் 01 ஆந் திகதிய 04/2016 ஆம் இலக்க பல்கலைக்கழக மானிங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கையின் பிரகாரம் தவறாக புரிந்துகொள்ளப்பட்டு NDT பாடநெறிக்காக மாணவர்களிடமிருந்து அறவிடப்படும் விண்ணப்ப கட்டணங்கள் நேர் செலவினமாக கருதி 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளினுள் முறையே ரூபா 340,823 மற்றும் ரூபா 663,180 தொகை உழியர் ஊக்குவிப்பு படிகளாக செலுத்தப்பட்டிருந்தது. | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் தொழில்நுட்ப டிப்ளோமா பாடநெறிக்கு மாணவர்களை தேர்வு செய்வதில்லை.<br><br>மொரட்டுவ பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவகத்தின் அனைத்து ஊழியர்களும் மாணவர்களைத் தெரிவு செய்தல் மற்றும் பதிவு செய்தல் உள்ளிட்ட முழு நடைமுறைகளிலும் ஈடுபட வேண்டும். எனவே, மாணவர்கள் தங்கள் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் போது இந்த செயல்முறைக்கு விண்ணப்பக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. | சுற்றறிக்கையின்படி பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 3.4 நிதியங்களின் குறைப்பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதியம் தாபிக்கப்பட்ட திகதி முதல் 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த ரூபா 8,125,524 கூட்டுதொகையான 03 நிதியங்கள் 04 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த ரூபா 955,030 ஆக நிதியமொன்று மீளாய்வாண்டினுள் உரிய நோக்கங்களுக்கு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இந்த நிதிகளில், ரூபா 5,842,405.00 மீண்டெழும் செலவினங்களுக்காக செலவிடப்பட்டுள்ளதுடன், மேலும், ரூபா 3,238,149.00 சம்பந்தப்பட்ட பிரிவுகளிலிருந்து விண்ணப்பங்கள் பெறப்படும் வரை நிலையான வைப்புகளில் முதலீடு செய்யப்பட்டுள்ளன. | நிதியம் உருவாக்கப்பட்ட நோக்கங்களுக்காக பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |